மின்னஞ்சல் மூலமாக

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை – 6
ந.க.எண். 3383/டபிள்யூ3/இ2/2024, நாள்.15.02.2024

பொருள்: தமிழ்நாடு மேல்நிலைக்கல்விப்பணி – அரசு மற்றும் நகராட்சி உயர்/மேல்நிலைப்பள்ளிகளில் – 01.01.2024 நிலவரப்படி பணிமாறுதல் மூலம் உடற்கல்வி இயக்குநர் நிலை – II இருந்து உடற்கல்வி இயக்குநர் நிலை – I ஆக பதவி உயர்வளிக்க தகுதி வாய்ந்தவர்களின் தற்காலிக (Temporary) உத்தேச பெயர்ப்பட்டியல் தயார் செய்யப்பட்டது – அனுப்பி வைத்தல் – அதில் சேர்க்கை, நீக்கம், திருத்தம் செய்து மீள அனுப்பக் கோருதல் – சார்பு.

பார்வை:
1. தமிழ்நாடு மேல்நிலைக் கல்விப்பணி சிறப்பு விதிகள் வெளியிடப்பட்ட அரசாணை எண் 14 பள்ளிக் கல்வித் துறை, நாள் 30.01.2020.
2. சென்னை–06, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (மேல்நிலைக் கல்வி) அவர்களின் செயல்முறைகள், ந.க.எண்.13006/டபிள்யு2/இ1/2023, நாள்.14.03.2023
3. அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துருக்கள்.

01.01.2023 நிலவரப்படி உடற்கல்வி இயக்குநர் நிலை – II இருந்து பணிமாறுதல் மூலம் இருந்து உடற்கல்வி இயக்குநர் நிலை – I ஆக பதவி உயர்வு வழங்க தகுதி வாய்ந்தோர் பெயர் பட்டியலினை அனுப்பி வைக்குமாறு பார்வை(2)ல் காணும் செயல்முறைகளின் வாயிலாக அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்களிடம் கோரப்பட்டு, அதன்படி அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துருக்களின் அடிப்படையில் உடற்கல்வி இயக்குநர் நிலை – I ஆக பதவி உயர்வு அளிப்பதற்காக தயார் செய்யப்பட்ட தற்காலிக (Temporary) உத்தேச பெயர்ப்பட்டியல் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

இப்பெயர் பட்டியலில் உள்ள உடற்கல்வி இயக்குநர் நிலை – II விவரங்களை பார்வை (2)–ல் கண்ட இவ்வியக்கக செயல்முறைகளில் தெரிவிக்கப்பட்ட நடைமுறைகளை பின்பற்றியும் கீழ்க்காணுமாறு குறிப்பிட்டவற்றின் அடிப்படையில் ஆவணங்களை ஒருமுறை சரிபார்த்து அனுப்பிடவும் 01.01.2024 நிலவரப்படி தகுதி வாய்ந்தவர்கள் இருப்பின் அவர்களை சேர்த்திடவும் கருத்துருக்கள் அனுப்புமாறு அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. அரசாணை எண்.107/18.08.2009,அ.எண்.65/02.07.2014ன்படி 10+2+3 மற்றும் இளங்கலை/முதுகலையில் முறையே B.P.Ed, M.P.E.S and M.P.Ed

பட்டமும் (Regular and correspondence university மூலம்) பெற்ற உடற்கல்வி இயக்குநர் நிலை – II ஆக பணிபுரிபவர்களின் பெயர்கள் மட்டுமே பட்டியலில் சேர்க்கப்படவேண்டும்.

2. இளங்கலை பட்டத்தில் இரட்டைட்படிப்பு (Double Degree) படித்தவர்களின் பெயர்கள் சேர்க்கப்படக்கூடாது.
3. அலகுவிட்டு அலகு மாறுதலில் / வேறு துறையிலிருந்து பள்ளிக் கல்வித் துறைக்கு ஈர்த்துக்கொள்ளப்பட்டவர்கள் சார்பாக அவர்கள் பள்ளிக் கல்வித் துறையில் பணியில் சேர்ந்த நாள் அடிப்படையில் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும்.
4. இப்பட்டியலில் இடம் பெற்றுள்ள ஆசிரியர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதேனும் நிலுவையில் உள்ளதா என்பதனை மீண்டும் ஒரு முறை கூர்ந்தாய்வு செய்ய வேண்டும்.
5. இப்பட்டியலில் இடம் பெற்றுள்ள ஆசிரியர்களின் EMIS ID NO மற்றும் பள்ளியின் UDISE NO சரியாக உள்ளனவா என்பதை சரிபார்த்து உறுதி செய்து கொள்ள வேண்டும்.

மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ள நடைமுறைகளைப் பின்பற்றி தற்காலிக (Temporary) உத்தேச பெயர் பட்டியலில் சேர்க்கை, நீக்கம் மற்றும் திருத்தம் ஏதும் செய்யவேண்டி இருப்பின் அவ்வாசிரியரின் விவரத்தினை dsew3sec@gmail.com மின்னஞ்சல் முகவரிக்கு 16/02/2024 க்குள் அனுப்பிவிட்டு, அதன் கையொப்பமிட்ட பிரிதியினை உரிய ஆவணங்களுடன் இணை இயக்குநர் (மேநிக) அவர்களின் பெயரிட்ட முகவரிக்கு உடனடியாக அஞ்சல் மூலம் அனுப்பிவிட்டு, அதன் விவரத்தினை பள்ளிக்கல்வி இயக்கக W3 பிரிவு பணியாளர்களிடம் தெரிவிக்குமாறும் அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். உத்தேச பெயர் பட்டியலில் சேர்க்கை, நீக்கம் மற்றும் திருத்தம் ஏதும் இல்லை எனில் இன்மை அறிக்கை பணிந்தனுப்புமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், இப்பட்டியலில் விதிகளுக்கு முரணாக பெயர் சேர்க்க பரிந்துரைத்தாலோ அல்லது பெயர் விடுபட்டதாகத் தெரிவித்து எந்த ஆசிரியரிடமிருந்து முறையீடு ஏதும் பின்னர் பெறப்பட்டாலோ அதற்கு சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலக பிரிவு எழுத்தர் , பிரிவு கண்காணிப்பாளர் மற்றும் முதன்மைக் கல்வி அலுவலர் முழுப் பொறுப்பையும் ஏற்க நேரிடும் எனவும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

**<u>// இது மிக மிக அவசரம் //</u>**

இணைப்பு –
பெயர்ப் பட்டியல் வ.எண். 1 முதல் 3 வரை

ஒப்பம்/–
க.அறிவொளி
பள்ளிக்கல்வி இயக்குநர்

பெறுநர்
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.